முருகப்பெருமான் துணை

**மகான் சுகப்பிரம்மர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.02.2024,** வியாழக்கிழமை

1. மாதரும வழிகளை காட்டி
   மக்களிடை ஞானம் அருள
   பூதலத்தில் அவதாரம் எடுத்த
   பிரணவக்குடில் அரங்க ஞானியே
2. ஞானியே உன் பெருமை கூறி
   நாட்டிடுவேன் துல்லிய ஆசி
   இனிமைபட சோபகிருது கலைதிங்கள்
   இருபானை திகதி குருவாரம்
   (சோபகிருது வருடம் தை மாதம் 25 ம் நாள், 08.02.2024, வியாழக்கிழமை)
3. வாரமதில் சுகப்பிரம்மர் யானும்
   வழங்குவேன் உலகநலம் பெற
   ஆரவாரமின்றி அமைதிபட
   ஆன்மீக ஞானப்பாதை அமைத்து
4. அமைத்துமே உலகமாற்றம் நிகழ்த்த
   ஆறுமுகக் கடவுளை வணங்கிட
   நேமமுடன் சரவண சோதி ஏற்றி
   நிலமதனில் பசிபிணி விரட்டும்
5. விரட்டும் அன்னதானம் துவக்கி
   வேலவன்தானும் இறங்கி அருள
   அறம் கூட்டி வளர்த்து வருக
   அன்னதனால் கலியுக மக்கள்
6. மக்கள் ஞானம் தேடிஅலையா
   மகான் அரங்கன் வழியில்
   ஆக்கமுடன் அனுகி வந்துமே
   ஆறுமுகனார் மகாமந்திர தீட்சை
7. தீட்சை ஏற்று வணங்கி
   தெரிவிக்க குருவே என
   தீட்சை வழி செபதபங்களுடனும்
   திடம் தரும் அன்னதான சேவை

8. சேவை ஏற்று தொடங்கி
செப்பிட இயன்ற வண்ணம் தருமம்
அவனியில் கருத்தாகச் செய்திட
அன்னமகா தயவின் வழி

9. வழிதனில் பரோபகார பலம்
வளர்ந்து சமத்துவ சமதர்ம
தெளிவுகள் யாவர்க்கும் கூடி
திடமாகி தேசிகன் ஆசியாலே

10. ஆசியாலே அவரவர் வினைகள்
அகன்று மேவி உலகமாற்றம்
ஆசியாலே அரங்கன் அவதாரத்தாலே
ஆறுமுகன் வெளிப்பட மாற்றம்

11. மாற்றம் மக்களிடை ஞானமாகி
மரணம் மறுமை கடந்து
ஆற்றல்பட ஞானத் தலைமை
அமைந்து ஞான ஆட்சி மலரும்
துல்லிய ஆசி முற்றே

—சுபம்—